உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி-உகூ] பிரஜோத்பத்திஸூ ஐப்பசிமீ [பகுதி-கஉ.

Vol. XXIX. October-November-1931. No. 12.

உலாக்கொண்ட மூன்று சோழமன்னர்கள்

களப்புலவர் எனவும் கௌடப்புலவர் எனவும் பாராட்டப்படும் கவிச்சக்கரவர்த்தியாகிய ஒட்டக்கூத்தரால் பாடப்பெற்ற உலாக்கொண்ட சோழமன்னர்கள் விக்கிரமசோழன், இரண்டாம் குலோத்துங்கசோழன், இரண்டாம் இராசராசசோழன் ஆகிய மூவருமே யாவர். இவ்வுண்மையை,

'கூடிய சீர்தந்த வெண்றெடுத்த கூத்தனுலாச்
சூடிய விக்கிரம சோழனும்—பாடிய
வெள்ளைக் கலியுலா மாலையொடு மீண்டுமவன்
பிள்ளைத் தமிழ்மாலை பெற்றோனும்—தெள்ளித்தன்
மூன்று யகரினவன் மூதுலாக் கண்ணிதொறும்
பொன்னு யிரஞ்சொரிந்த பூபதியும்'

என்னும் சங்கரசோழனுலாவடிகளால் நன்குணரலாம். இனி, இம் மூவேந்தரது வரலாற்றையும் அடியில் வரைவாம்.

விக்கிரமசோழன் கி. பி. 1120—கி. பி. 1136:-

இம்மன்னன் கி. பி. 1070 முதல் 1120 வரை நம் தமிழகத்தில் சக்கரவர்த்தியாக வீற்றிருந்து தனக்கு ஒப்பாரும் மிக்காருமின்றிச் செங்கோல்செலுத்தியவனும் சுங்கந்தவிர்த்தசோழன் என்று அறிஞர்களாற் புகழப்படுபவனுமாகிய முதற் குலோத்துங்கசோழன் மகனாவன். நமது விக்கிரமசோழன் அரசிளங்குமாரனாகவிருக்கும் நாட்களில் தன் தந்தையைப்பெற்ற பாட்டனும் தன் தமையனும் ஆட்சிபுரிந்த

வேங்கைநாட்டிற்குச் சென்று அங்கு அரசப்பிரதிநிதியாகவிருந்து அதனை ஆண்டுவந்தனன். வேங்கைநாடு என்பது கிருட்டிணை கோதாவிரி என்ற இரண்டு பேராறுகளுக்கும் இடையில் கீழ்கடலைச்சார்ந்திருந்த ஒரு நாடாகும். இந்நாட்டில் விக்கிரமன் அரசப்பிரதிநிதியாக்விருக்கும்நாட்களில் இவன் கி. பி. 1096ஆம் ஆண்டில் தென்கலிங்க நாட்டின்மேற் படையெடுத்துச்சென்று அந்நாட்டின் அரசனாகிய தெலுங்கவீமனைப் போரிற் புறங்கண்டு வாகைசூடித் திரும்பினன். இவன் இங்ஙனம் கலிங்கம் வென்ற செய்தி,

'தெலுங்க வீமன் விலங்கன்மிசை யேறவும்
கலிங்க பூமியைக் கனலெரி பருகவும்
ஐம்படைப் பருவத்து வெம்படை தாங்கி
வேங்கை மண்டலத் தாங்கினி திருந்து
வடதிசை யடிப்படுத் தருளி'

என்னும் இவனது மெய்க்கீர்த்தியிலும் நன்கு விளக்கப்பட்டுள்ளது. அன்றியும், நம் விக்கிரமனது தென்கலிங்க வெற்றி,

—'போர்த்தொழிலால்
வனைக் கலிங்கங்கள் ஏழினையும் போய்க்கொண்ட
தானைத் தியாக சமுத்திரமே'

என்று விக்கிரமசோழனுலாவிலும்,

—'வெற்றோர்
விரும்பாணில் வெங்களத்தீ வேட்டுக் கலிங்கப்
பெரும்பாணி கொண்ட பெருமாள்'

என்று குலோத்துங்கசோழனுலாவிலும்,

—'பலவுந்
தாணி யொருகவிகை தங்கக் கலிங்கப்
பாணி புனைந்த பரிதி—மூாணிப்
புரந்தர னேமி பொருவ வகில
துரந்தான் விக்கிரம சோழன்'

என்று இராசராசசோழனுலாவிலும்,

'செருத்தந் திரிந்து கலிங்க ரோடத்
தென்றமிழ்த் தெய்வப் பாணிகொண்டு
வருத்தந் தணிந்துல காண்ட பிரானன்
மைந்தற்கு மைந்தனை வாழ்த்தினவே'

என்று தக்கயாகப்பரணியிலும் புலவர்பெருமானாகிய ஒட்டக்கூத்தரால் பெரிதும் புகழப்பெற்றுள்ளது. இனி, இக்கலிங்கவெற்றியைப் பாராட்டி விக்கிரமசோழன்மீது கலிங்கப்பரணியொன்றும் இவனது அவைக்களப் புலவராகிய ஒட்டக்கூத்தரால் அந்நாளில் பாடப்பட்டுள்ளது என்பது, மகாமகோபாத்தியாய சாமிநாதையரவர்களால் சிறந்த ஆராய்ச்சிக்குறிப்புக்களுடன் வெளியிடப்பட்டுள்ள தக்கயாகப்பரணியென்னும் நூலால் நன்கறியப்படுகின்றது. இக்கலிங்கப்பரணியும் முதற்குலோத்துங்க சோழன்மீது சயங்கொண்டாரால் பாடப்பட்ட கலிங்கத்துப்பரணியும் வேறுவேறு நூல்களாதல் உணர்க.

வேங்கைநாட்டில் ஆட்சிபுரிந்துகொண்டிருந்த விக்கிரமசோழனை கி. பி. 1108-ஆம் ஆண்டில் சோழமண்டலத்திற்கு அழைப்பித்து முதற்குலோத்துங்கசோழன் அவனுக்கு இளவரசுப்பட்டங்கட்டினான். இளவரசனாகிய விக்கிரமனும் தன் தந்தைபால் அரசியல்நுட்பங்களைக் கற்று வல்லனாயினான். பின்னர், கி. பி. 1120-ஆம் ஆண்டில் முதற்குலோத்துங்கசோழன் விண்ணுலகெய்தவே, விக்கிரமசோழனும் சோழமண்டலத்தின் தலைநகராகிய கங்கைகொண்டசோழபுரத்தில் சக்கரவர்த்தியாக முடிசூடிக்கொண்டான். முடிசூடிய நன்னாளில், தன் தந்தை குலோத்துங்கசோழனைப்போல் விக்கிரமனும் திரிபுவனச்சக்கரவர்த்தி என்ற பட்டம் புனைந்துகொண்டனன்.

சோழமன்னர் ஒருவர்பின் ஒருவராகப் புனைந்துகொண்டுவந்த இராசகேசரி, பரகேசரி என்னும் பட்டங்களுள் நம் விக்கிரமன் பரகேசரி என்ற பட்டம் புனைந்து அரசாண்டான.

இவ்வேந்தன் ஆட்சிபுரிந்தது 17-ஆண்டுகளாகும். சோழமண்டலத்தைச் சிறப்புடன் அரசாண்ட சோழமன்னர்களுள் விக்கிரமசோழனும் ஒருவன் என்பதிற் சிறிதும் ஐயமில்லை. இவனது ஆட்சியின் ஆறும் ஆண்டில் வடக்கேயுள்ள திருவொத்தூர் முதல் தெற்கேயுள்ள

தஞ்சாவூர்வரையில் மழைமிகுதியினால் உண்டான வெள்ளத்தினால் பஞ்சம் உண்டாயிற்று என்பது கோவிலடி, உடையார்கோயில், திருவதிகை, திருவோத்தூர் முதலான இடங்களிலுள்ள கல்வெட்டுக்களால் புலப்படுகின்றது. அந்நாட்களில் விக்கிரமசோழன் குடிகளது துன்பத்தைப் போக்கிப் பல நன்மைகளும் புரிந்தனன்.

விக்கிரமனுக்குத் திறைசெலுத்திவந்த வேங்கைநாட்டின் குறுநில மன்னனாகிய வெலநாண்டுசோழன் ஒருவன், சோழர்களுக்குப் பெரும் பகைவனாயிருந்த மேலைச்சளுக்கியமன்னனாகிய ஆறும்விக்கிரமாதித்தனோடு சேர்ந்துகொண்டு விக்கிரமசோழனோடு முரண்பட்டனன். இதனையுணர்ந்தவிக்கிரமசோழன் வேங்கைநாட்டிற்குப் படையெடுத்துச்சென்று அதனை வென்று கைப்பற்றிக்கொண்டனன். இது கி. பி. 1125-க்கு முன்னர் நிகழ்ந்த போராகும்.

இனிச் சோழமன்னர்களுக்குக் குலதெய்வமாகவிளங்கியவர் தில்லையம்பதியில் எழுந்தருளியுள்ள நடராசப்பெருமான் என்பது கல்வெட்டுக்களாலும் பிறவாற்றானும் அறிந்த உண்மையாகும். இதுபற்றியே முதல் ஆதித்தன், முதல்பராந்தகன் முதலான சோழமன்னர்கள் தம் ஆட்சிக்காலங்களில் தில்லையம்பலத்திற்குப் பொன்வேய்ந்தனர். விக்கிரமசோழனும் தன் ஆட்சியின் பத்தாம் ஆண்டில் புறநாட்டுமன்னர்கள் செலுத்திய திறைப்பொருளைக்கொண்டு தில்லையம்பலத்திற்கும் திருச்சுற்றுமாளிகைக்கும் பலிபீடத்திற்கும் பொன்வேய்ந்து சிறப்பித்தனன்; அங்குத் தன்பெயரால் திருவீதியும் மாளிகையும் கட்டுவித்தனன்; தான் பிறந்தநாளாகிய புரட்டாசித்திங்கள் உத்திரட்டாதிநாளில் அம்பலம்நிறைந்த அற்புதக்கூத்தற்கு ஆண்டுதோறும் பெருந்திருவிழா நிகழ்த்த ஏற்பாடு புரிந்தனன். இதனால், இவனது ஒப்பற்ற சிவபத்தியின்மாண்பு நன்கு புலப்படுதல் காண்க. இச்செய்திகளை,

"வருமுறை முன்னே மன்னவர் சுமந்து
திறைநிறைத்துச் சொரிந்த செம்பொற் குவையால்
தன்குல நாயகன் தாண்டவம் பயிலும்
செம்பொனம் பலஞ்சூழ் திருமா ளிகையும்
கோபுர வாசல் கூடசா லைகளும்
உலகு வலங்கொண் டொளிவிளங்கு நேமிக்

குலவரை யுதய குன்றமொடு நின்றெனப்
பசும்பொன் வேய்ந்த பலிவளர் பீடமும்
விசும்பொளி தழைப்ப விளங்குபொன் வேய்ந்து
இருநிலந் தழைப்ப விமையவர் களிப்பப்
பெரிய திருநாட் பெரும்பெயர் விழாவெனும்
உயர்புரட் டாசி யுத்திரட் டாதியில்
அம்பல நிறைந்த அற்புதக் கூத்தர்
இம்பர் வாழ வெழுந்தருள் வதற்குத்
திருத்தேர்க் கோயில் செம்பொன் வேய்ந்து
பருஉத் திரண் முத்தின் பயில்வடம் பாப்பி
நிறைமணி மாளிகை நெடுந்திரு வீதிதன்
திருவளர் பெயராற் செய்து சமைத் தருளிப்
பைம்பொற் குழித்த பரிகல முதலாச்
செம்பொற் கற்பகத் தொடுபரிச் சின்னமும்
அளவில் லாதன வொளிபெற வமைத்துப்
பத்தாம் ஆண்டிற் சித்திரைத் திங்கள்
அத்தம் பெற்ற ஆதிவா ரத்துத்
திருவளர் மதியின் திரயோதசிப் பக்கத்து
இன்ன பலவும் இனிது சமைத் தருளி."

எனனும் இவ்வேந்தனது மெய்க்கீர்த்தியால் ஒருவாறு அறிந்து கொள்ளலாம்.

இனி, தஞ்சாவூர்ஜில்லா மாயூரந்தாலூகாவில் திருமங்கலம் என்னும் ஊரிலுள்ள சிவாலயம் விக்கிரமசோழனால் எடுப்பிக்கப்பெற்றது என்பது அவ்வூரிலுள்ள கல்வெட்டுக்களாற் புலப்படுகின்றது. அதற்கு அண்மையிலுள்ள குற்றாலத்தில் விக்கிரமசோழேச்சுரம் என்ற சிவாலயம் ஒன்றுளது. இது விக்கிரமசோழனாலாவது இவனது அதிகாரிகளுள் ஒருவனாலாவது கட்டப்பெற்றதாதல்வேண்டும். குற்றாலத்தையே விக்கிரமன்குற்றாலம் என்று கல்வெட்டுக்கள் குறிக்கின்றன. எனவே, இவ்வூர் மேலேகுறித்துள்ள சிவாலயங்கட்கு நம் விக்கிரமனால் நிபந்தமாக விடப்பட்டிருத்தலும் கூடும். குற்றாலத்திற்கு அண்மையில் ஓடும் விக்கிரமன்ஆறு இவ்வரசனால் வெட்டப்பெற்றதுபோலும். தஞ்சைப்

பெரியகோயில் கருப்பக்கிரகத்திலுள்ள தெற்குத்திருவாசல் "திருவிக்கிரமன் திருவாசல்" என்னும் பெயருடையது என்பது ஒரு கல்வெட்டால் அறியப்படுகின்றது.

திருவரங்கத்திலுள்ள "திருவிக்கிரமன் திருவீதி" "அகளங்கன் திருவீதி" என்ற இருபெருவீதிகளும் நம் விக்கிரமனால் கட்டப் பெற்றவையாகும். இச்செயல் இவன் வைணவமதத்தில் வெறுப்பில்லாதவன் என்பதை விளக்காநிற்கும். கோயிலொழுகு என்ற வைணவநூலும் இவனைப் பெரிதும் புகழ்கின்றது.

அகளங்கன், தியாகசமுத்திரம் என்ற பெயர்களும் இவனுக்கு வழங்கியுள்ளன என்பது விக்கிரமசோழனுலாவினால் புலப்படுகின்றது. இதுகாறும் ஆராய்ந்துகண்ட அளவில் இவ்வேந்தனுக்கு நான்கு மனைவியர் உண்டு என்பது கல்வெட்டுக்களால் வெளியாகின்றது. அன்னார், முக்கோக்கிழானடிகள், திருபுவனமுழுதுடையாள், தாணிமுழுதுடையாள், நேரியன்மாதேவியார் என்போர். இவர்களுள், முக்கோக்கிழானடிகள் என்பாள் இம்மன்னனது ஆட்சியில் ஒன்பது ஆண்டுகள்வரையில் பட்டத்தரசியாயிருந்து பின்னர் இறந்தனள். பிறகு இரண்டாம்மனைவியாகிய திரிபுவனமுழுதுடையாள் பட்டத்தரசியாயினள். இவளைத் "தேரிவையர்திலகம்" எனவும் "தியாகபதாகை" எனவும் "புனிதகுணவனிதை" எனவும் விக்கிரமசோழன்மெய்க்கீர்த்தி புகழ்ந்து கூறுகின்றது. அம்மெய்க்கீர்த்தியே, இவனது மூன்றும் மனைவியாகிய தாணிமுழுதுடையாளைப் "பூதலத்தருந்ததி" எனவும் "அரணியற்கற்பிற் றரணிமுழுதுடையாள்" எனவும் பாராட்டுகின்றது.

நம் விக்கிரமனுக்கு எத்தனைமக்கள் இருந்தனர் என்பது இதுபோது அறியமுடியவில்லை. எனினும், இவ்வேந்தனுக்குப் பின்னர் முடிசூடிக்கொண்ட இரண்டாம் குலோத்துங்கசோழன் இவனது தவப்புதல்வனேயாவன். இவ்வரசிளஞ்சிங்கம் விக்கிரமசோழனது மனைவியருள் யாருடைய மகன் என்பது தற்காலத்திற் புலப்படவில்லை. 'தந்தை மகற்காற்று நன்றி யவையத்து—முந்தி யிருப்பச் செயல்' என்னும் பொய்யில்புலவர்பொருளுரைக்கேற்ப, விக்கிரமனும் தன்மகனாகிய குலோத்துங்கனைப் புலவர்பெருமானாகிய ஒட்டக்கூத்தர்பாற் கல்விபயின்றுவரச் செய்தனன். குலோத்துங்கனும் கவிச்சக்கரவர்த்திபிடத்திற் கற்று

வல்லனாகிக் கவிமழைபொழியும் காளமேகமாய்த் 'தந்தையினும் சதமடங்கு தனயன்' என்று அறிஞர்கள் புகழுமாறு ஈடும் எடுப்புமற்றவனாக விளங்கினான். கி. பி. 1136 ஆம் ஆண்டில் விக்கிரமசோழன் விண்ணுலகெய்தவே, இவன் மகனும் தண்டமிழ்ப்புலமைவாய்ந்த ஒண்டிறல் மன்னனும் ஆகிய இரண்டாம் குலோத்துங்கசோழன் சோழ இராச்சியத்திற்குச் சக்கரவர்த்தியாக முடிசூட்டப்பெற்றான்.

விக்கிரமசோழனது அவைக்களப்புலவராக விளங்கியவர் கவிச்சக்கரவர்த்தியாகிய ஒட்டக்கூத்தர் ஆவர். இவ்வேந்தன் புலவர்பெருமக்களிடத்து எத்தகையமதிப்பு வைத்திருந்தனன் என்பது இவன் ஒட்டக்கூத்தருக்கு அளித்துள்ள பலவரிசைகளாலும் விருதுகளாலும் நன்குபுலப்படும். புலவர்பெருமானாகிய ஒட்டக்கூத்தரும், அரசனிடத்துத் தாம் கொண்டுள்ள பேரன்பிற்கு அடையாளமாக இவன்மீது உலா ஒன்றும் பரணி ஒன்றும் பாடியுள்ளனர். அவை விக்கிரமசோழதேவருலா எனவும், கலிங்கப்பரணி எனவும் வழங்கப்பெறும்; இவற்றுள் கலிங்கப்பரணி இதுபோது கிடைத்திலது.

இரண்டாங் குலோத்துங்கசோழன் கி. பி. 1136—கி. பி. 1146:-

இம் மன்னர்பெருமான் விக்கிரமசோழன்மகன் என்பது முன்னரே உணர்த்தப்பட்டது. இவனது ஆட்சிக்காலம் கி. பி. 1136-க்கும் 1146-க்கும் இடைப்பட்டதாகும். இவனது ஆளுகையில் மக்கள் எல்லோரும் வறுமைநோயின்றி இனிது வாழ்ந்துவந்தனர் என்பது இவனது மெய்க்கீர்த்தியால் நன்கு அறியப்படுகின்றது. அன்றியும், இவனதுபெயர்களுள் ஒன்றாகிய 'கலிகடிந்தசோழன்' என்பது இச்செய்தியை நன்கு உணர்த்தாநிற்கும். இவன், தன் தந்தையாகிய விக்கிரமசோழனாலும் பாட்டனாகிய முதற்குலோத்துங்கசோழனாலும் பாதுகாக்கப்பெற்ற சோழராச்சியத்தை அதன் சீரும் சிறப்பும் குன்றாதவாறு, அமைதி யாண்டும் நிலவ, ஆட்சிபுரிந்துவந்தனன். இவன் தன் ஆளுகையில் தனது அரும்பெறல் ஆசிரியரும் அவைக்களப்புலவருமாகிய ஒட்டக்கூத்தரையே உற்ற உசாத்துணையாகக்கொண்டு ஒழுகிவந்தான். ஆகவே, பெரும்புலவர் ஒருவரது துணைக்கொண்டு இவன் நடத்திவந்த அரசாங்கத்தில் மக்கள் எல்லோரும் இனிது வாழ்ந்துவந்தனராதல்வேண்டும். சிவபெருமானது அளப்பரிய பெருமையினையும்

சிறப்பினையும் நன்குணர்ந்த நம் குலோத்துங்கசோழன் அப்பெருமானிடத்துப் பெரிதும் ஈடுபாடுடையவனாய்த் தன் முன்னோர்களைப்போலத் தில்லையம்பலத்திற்குப் பொன்வேய்ந்து அதனைச் சிறப்பிக்க எண்ணித் தில்லையம்பதிக்குச்சென்று மன்றுக்கிடங்காணவேண்டி ஆண்டுள்ள திருச்சித்திரகூடத்தில் அரவணையின்மீது அறிதுயிலமர்ந்த செங்கண் மாலை அலைகடலிற் கிடத்துமாறுசெய்தனன். இதனைத்,

'தில்லைத் திருமன்றின் முன்றிற் சிறுதெய்வத்
தொல்லைக் குறும்பு தொலைத் தெடுத்து'—

என்ற குலோத்துங்க சோழனுலாவடிகளாலும்,

'பொன்னிற் குயிற்றிப் புறம்பிற் குறும்பனைத்து
முன்னர்க் கடலகழின் மூழ்குவித்த—சென்னி'

என்ற இராசராசசோழனுலாவடிகளாலும்,

'முன்றிற் கிடந்த கருங்கடல்போய்
முன்னைக் கடல்புகப் பின்னைத்தில்லை
மன்றுக் கிடங்கண்ட கொண்டல்பெற்ற
மரகத மேருவை வாழ்த்தினவே.'

என்ற தக்கயாகப்பரணித் தாழிசையாலும் நன்கு அறியலாம். இராமானுசர் திப்பியசரிதை, குருபரம்பரை என்ற வைணவநூல்கள் இவ்வேந்தனை வெறுத்துரைப்பதற்குக் காரணம் இதுவேயாகும்.

இனி, நம் குலோத்துங்கன் தில்லையம்பதியிற் செய்துள்ள திருப்பணிகள் அளவற்றனவாகும். அவற்றுள், சிற்றம்பலம் பொன்வேய்ந்தமையும், பேரம்பலம், எழுநிலைக்கோபுரம், திருமாளிகை இவற்றைக் கட்டுவித்தமையும் சிவகாமக்கோட்டத் திருப்பணி ஆற்றியமையும் இங்குக் குறிப்பிடத்தக்கனவாகும். அன்றியும், தில்லைமாநகரில் 'குலோத்துங்கன் திருவீதி' என்ற இருவீதிகளை இவ்வேந்தன் அமைத்தனன் என்பதும் ஈண்டு அறிந்துகோடற்குரியதாகும். இவற்றையெல்லாம் கவிச்சக்கரவர்த்தியாகிய ஒட்டக்கூத்தர் இவ்வரசன்மீது தாம் பாடியுள்ள குலோத்துங்கசோழனுலாவில் விரித்துக்கூறியுள்ளனர். (75 ஆம் அடிமுதல்

116 ஆம் அடிமுடியப் பார்க்க)* அன்றியும், இப்புலவர் இயற்றியுள்ள தக்கயாகப்பரணியிற் காணப்படும்,

'கூட மெடுத்த குளத்தொடு கோபுர
மாட மெடுத்த பிரான்மகன் வாழியே'

'கோயின்முன் னேழ்நிலை கொண்டதோர் கோபுர
வாயில் வகுத்த பிரான்மகன் வாழியே'

'எண்டரு திக்கினிற் றில்லையி னேர்பெறு
மண்டபம் வைத்த பிரான்மகன் வாழியே'

என்னும் தாழிசைகளாலும் இச்செய்திகளை அறியலாம்.

இனி, நம் தமிழகத்திலுள்ள பல சிவாலயங்கட்கு இவ்வேந்தன் திருப்பணிசெய்திருத்தலோடு அவற்றிற்கு நிபந்தங்களும் விட்டிருக்கின்றனன் என்பது பல கல்வெட்டுக்களாற் புலப்படுகின்றது. செங்கற்பட்டுச் சில்லா செய்யாறுதாலூகாவிலுள்ள பிரமதேசம் உருத்திரகோடீச்சுரமுடை ஆலயத்திற்குத் தன்பெயரால் 'அனபாயநல்லூர்' என்ற ஊரை நிபந்தமாக இவன் விட்டனன் என்றும் அஃது ஐந்நூறுகலநெல் வருவாயுடையது என்றும் ஒரு கல்வெட்டு உணர்த்துகின்றது. [Inscription No. 271 of 1915] திருக்கண்ணபுரத்திற் கண்மையிலுள்ள இராமநதீச்சுரமுடைய மகாதேவர்க்கு நித்தியபூசையின்மையின், அதனை நடத்துவதற்கு ஓர் ஊரை நிபந்தம்விட்டு அவ்வூர்க்குச் 'சிவபாத சேகரமங்கலம்' என்ற பெயரும் நம் குலோத்துங்கன் வழங்கினான் என்று ஒரு கல்வெட்டு அறிவிக்கின்றது. [Inscription No. 533 of 1922.] இதுகாறும் கூறியவாற்றாற் குலோத்துங்கனது ஒப்புயர்வற்ற சிவபத்தியை நன்குணரலாம்.

இவ்வேந்தன், புலவர்பெருமானாகிய ஒட்டக்கூத்தரைத் தன் ஆசிரியாகவும் அவைக்களப்புலவராகவும் கொண்டவன் என்பது முன்னரே கூறப்பட்டது. தண்டமிழ்ப்புலமையிற் சிறந்த நம் குலோத்துங்கன் தன் ஆசிரியரிடத்து எத்தகைய மதிப்பும் அன்பும் கொண்டிருந்தனன் என்பது,

---

*மதனப்பள்ளி காலேஜ் தமிழாசிரியராயுள்ள திருவாளர் அ. கோபாலையர் அவர்கள் வெளியிட்டுள்ள 'மூவருலா'விற் காண்க.

"பாடுங் கவிப்பெரு மானொட்டக் கூத்தன் பதாயம்புயத்தைச்
சூடுங் குலோத்துங்க சோழனென் றேயென்னைச் சொல்லுவரே"

என்னும் பாடற்பகுதியால் இனிது விளங்கும். ஒட்டக்கூத்தரும் இவன்மீது உலாவும் பிள்ளைத்தமிழும் பாடியுள்ளனர். அவை, குலோத்துங்கசோழனுலா, குலோத்துங்கசோழன்பிள்ளைத்தமிழ் என்பன.

இவ்வரசர்பெருமானுக்கு அனபாயன், கவிகடிந்தசோழன் என்ற வேறு பெயர்களும் வழங்கியுள்ளன. குலோத்துங்கசோழனுலாவில் அனபாயன் என்ற பெயர் பயின்றுவருதலைப் பலவிடங்களிற் காணலாம். இவன் இராசகேசரி என்ற பட்டம் புனைந்து அரசாண்டவன் என்பது பல கல்வெட்டுக்களால் அறியப்படுகின்றது. அன்றியும் இவன் தன் முன்னோர்களைப்போலத் திரிபுவனச்சக்கரவர்த்தி என்ற பட்டத்தையும் வைத்துக்கொண்டான்.

இவனுக்குச் செம்பியன்கிழானடிகள், உலகமுழுதுடையாள் என்ற இருமனைவியரும் இராசராசன் என்ற ஒரு மகனும் இருந்தனர். நம் குலோத்துங்கனுக்குப் பின்னர் இந்த இராசராசனே பட்டம் எய்தினன்.

'முன்செய் தவத்தாற் பரிதிவழித் தோன்றி
நெடுமால் இவனெனச் சுடர்முடி சூடி
இருநில மகளை யுரிமையிற் புணர்ந்து
மீனமும் சிலையுஞ் சிதைத்து வானுயர்
பொன்னெடு மேருவிற் புலிவீற் றிருப்ப
மன்னுயிர் தழைப்ப மனுவாறு விளங்க
மாதவர் தவமும் மங்கையர் கற்பும்
ஆதி யந்தணர் ஆகுதிக் கனலும்
மீதெழு கொண்டல் வீசுதண் புனலும்
நீதி யறமும் பிறழாது நிகழச்'

செங்கோல் செலுத்திய இரண்டாங்குலோத்துங்கசோழனும் கி. பி 1146-ஆம் ஆண்டில் சிவபெருமான் திருவடியை அடைந்தான்.

இரண்டாம் இராசராசசோழன் 1146—1162 கி. பி.

இவன் இரண்டாங் குலோத்துங்கனுடைய புதல்வன்; கி. பி. 1146ஆம் ஆண்டில் கங்கைகொண்டசோழபுரத்தில் சக்கரவர்த்தியாக

முடிசூட்டப்பெற்றான். இவனைப் பரகேசரி இராசராசசோழன் என்றும் கல்வெட்டுக்கள் கூறும். இவன் தன் முன்னோரைப்போல் திரிபுவனச் சக்கரவர்த்தி என்ற பட்டமும் புனைந்துகொண்டான். இவனது ஆட்சி சோழமண்டலத்திலும் பிற மண்டலங்களிலும் அமைதியுடன் நடைபெற்றுவந்தது. இவனது ஆளுகையில் போர்நிகழ்ச்சியே சிறிதும் இல்லை எனலாம். எனவே, இவன்காலத்தில் மக்கள் துன்புறுதற்கு ஏதுவான செயல்கள் எவையும் நிகழாமையின் குடிமக்கள் எல்லோரும் இன்புற்று வாழ்ந்துவந்தனர். இவ்வேந்தர்பெருமான்,

> 'தந்தையிலோர்க்குத் தந்தையாகியுந் தாயிலோர்க்குத் தாயாகியும்
> மைந்த ரிலோர்க்கு மைந்தராகியு மன்னுயிர்கட் குயிராகியும்
> எத்துறைக்கும் இறைவனெனவும் வரஞ்செயும் பெருந்தவமெனவும்
> முத்தமிழ்க்குத் தலைவனெனவும் மூன்றுலகின் முதல்வனெனவும்
> அரசியற்கை முறைநிறுத்தி யல்லவைகடிந் தாறய்த்துப்
> பொருகலியி னிருளகற்றிப் புகழெனு நிலாப்பரப்பிச்'

செங்கோல்செலுத்திவந்தானென்று இவனது மெய்க்கீர்த்தியும்* கூறுகின்றது.

இனி, இவனை 'முத்தமிழ்க்குந்தலைவன்' எனவும் 'ராசபண்டிதன்' எனவும் இவனது மெய்க்கீர்த்தி புகழ்ந்துகூறுதலால், இவன் செந்தமிழ்ப்புலமையிற் சிறந்த வேந்தனாக விருந்திருத்தல்வேண்டும் என்பது நன்கறியப்படுகின்றது. அன்றியும், இச்செய்தி, 'ஓவாது—செய்ய தமிழ் முழங்கத் தேய்வப் போதியிலாய்' என்னும் இராசராசசோழனுலாவடியாலும் உறுதியெய்துகின்றது. இச்செந்தமிழ்ப்புலமையும் இவன் புலவர்பெருமானாகிய ஒட்டக்கூத்தர்பாற் கல்விபயின்று பெற்றிருத்தல்வேண்டும். கவிச்சக்கரவர்த்தியாகிய கூத்தர் இவ்வரசன்காலத்திலும் உயிர்வாழ்ந்திருந்தனர் என்பது இவர் பாடியுள்ள இராசராசசோழனுலாவினால் புலப்படுகின்றது. தன் பாட்டனாகிய விக்கிரமசோழன்மீதும் தந்தையாகிய குலோத்துங்கசோழன்மீதும் உலாக்கள்பாடிச் சிறப்பித்த கவிச்சக்கரவர்த்தி முதுமைப்பருவத்தில் தன்மீதும் உலா ஒன்று பாடிப் பாராட்டியிருப்பது இவ்வரசனுக்குப் பெருமகிழ்ச்சி யளித்திருக்கும்

---

*இம்மெய்க்கீர்த்தி, இலக்கணவிளக்க ஆசிரியரது வழியினராகிய திருவாளர் S. சோமசுந்தரதேசிகர் அவர்களால் முதலிற் கண்டு செந்தமிழில் வெளியிடப்பெற்றுள்ளது.

என்பது திண்ணம். இம் மன்னன் இவ்வுலாவிலுள்ள ஒவ்வொரு கண்ணிக்கும் ஒவ்வோராயிரம்பொன் பரிசில் அளித்துள்ளான் எனின், நம் புலவரிடத்தும் அவரியற்றிய நூலிடத்தும் எத்துணை மதிப்பும், அன்பும் வைத்திருந்தான் என்பது கூறுந்தரத்ததாமோ? இவ்வுண்மை,

> 'முன்னு பகரினவன் மூதுலாக் கண்ணிதொறும்
> பொன்னு யிரஞ்சொரிந்த பூபதியும்'

என்னும் சங்கரசோழனுலாவடிகளால் இனிது பெறப்படுகின்றது. ஒட்டக்கூத்தர், தக்கயாகப்பரணியும் ஈட்டியெழுபதும் பாடியது இவ் வேந்தனது ஆட்சிக்காலத்தில் நிகழ்ந்ததாகும். எனவே, சிறந்த தமிழ் நூல்கள்தோன்றிய காலப்பகுதிகளுள் இவ்வரசனது ஆட்சிக்காலமும் ஒன்றென மதித்தற் குரியதாகும்.

இவன் தன் மூன்னோர்களைப்போல் சிவபெருமானிடத்துச் சிறந்த பத்தியுடையவனுயிருந்தனன்; பல சிவாலயங்கட்குத் திருப்பணிசெய் திருத்தலோடு நிபந்தங்களும் விட்டிருக்கின்றனன்; எனினும், தன் தந்தையைப்போல் வைணவசமயத்திற் சிறிதும் வெறுப்புடையனல்லன். அன்றியும், தன் தந்தையின் ஆட்சிக்காலத்தில் தாழ்ந்தநிலைஎய்திய வைணவசமயத்தை மீண்டும் நன்னிலைக்குக் கொணர்ந்தவன் இவனே என்பது, 'விழுந்த அரிசமயத்தையும் மீளவெடுத்து ஆதியுகம்—கோழுந்துவிட்டுத் தழைத்தோங்க' என்னும் இவனது மெய்க்கீர்த்தியால் வெளியாகின்றது. எனவே, இவன்காலத்தில் வைணவசமயமும் பெருமையெய்திற்று; வைணவரும் அச்சமுந் துன்பமுமின்றி வாழ்ந்து வந்தனர். ஆகவே, இவன் தன் பாட்டன் விக்கிரமசோழனைப்போல் சமயக்கோட்பாட்டிற் பொதுநோக்குடையவனுய்த் திகழ்ந்த பெருவேந்தனுதல்வேண்டும்.

இனி, இவனது மனைவிமார்களாகத் தற்காலத்தில் அறியப்பட்டுள்ளோர், புவனமுழுதுடையாள், தாணிமுழுதுடையாள், அவனிமுழுதுடையாள், தென்னவன் கிழானடிகள் என்போர். இவர்களுள், புவனமுழுதுடையாளே பட்டத்தரசியாயிருந்தனள். இவள் 'பெண்ணரசாய் முடிசூடி—உடனுணையும் உடனிருக்கையும் உடனரசும் உடன் சிறப்பும்—கடனுகவே படைத்தருளி அறம் புரக்குங் கருணைவல்லி' யாக

விளங்கினாள் என்று நம் இராசராசசோழனது மெய்க்கீர்த்தி கூறுகின்றது. இதனால் அக்காலத்துச் சோழமன்னர்கள் தம் பட்டத்தரசிகளுக்கு ஒத்த உரிமையும் சிறப்பும் அளித்துவந்தனர் என்பது இனிது புலப்படுகின்றது. இரண்டாவதுமனைவியாகிய தரணிமுழுதுடையாளைத் 'தையலர்க்கொரு சூளாமணி' எனவும் 'புண்ணியமொரு வடிவுகொண்டு புகழென்னும் மணிபுனைந்து—பெண்ணியல்பு தனதாகப் பிறந்ததேனச் சிறந்தபேதை' எனவும் அம்மெய்க்கீர்த்தி பாராட்டிப் புகழ்கின்றது. மூன்றும் மனைவியாகிய அவனிமுழுதுடையாளை அருந்ததிபோன்றவள் என்று அம்மெய்க்கீர்த்தி கூறுவதோடு அவள் மலாடர்குலத்திற் பிறந்தவள் என்றும் உணர்த்துகின்றது. நான்காம் மனைவியாகிய தென்னவன்கிழானடிகள் பாண்டியன்மகள் என்று தெரிகின்றது.

இவனுக்குரிய வேறுபெயர்கள் இராசகெம்பீரன், சோழேந்திரசிங்கம், தெய்வப்பெருமாள், சனநாதன் என்பன. இப்பெயர்களெல்லாம் கல்வெட்டுக்களிற் காணப்படுவதோடு இராசராசசோழனுலாவிலும் பயின்று வருகின்றன. (இராசராசசோழனுலா—அடிகள் ; 76, 252, 725). கும்பகோணத்திற்கு அண்மையில் தாராசுரம் என்று தற்காலத்தில் வழங்கும் இராசராசபுரம் என்னும் ஊரிலுள்ள சிவாலயத்திற் சித்திரநுட்பங்கள் பெரிதும் அமையப்பெற்ற ஓர் அழகிய மண்டபம் 'இராசகெம்பீரன் திருமண்டபம்' என்னும் பெயருடன் இன்றும் உளது. (Inscription No. 256 of 1927) இவ்வூர் நம் இராசராசனது இயற்பெயரால் இராசராசபுரம் என்று வழங்கிப் பின்னர் 'ராராசுரம்' எனவும் 'தாராசுரம்' எனவும் மருவிவழங்கலாயிற்று. இந்த இராசராசபுரம் தக்கயாகப்பரணியின் கடைதிறப்பு என்ற பகுதியிலும் ஒட்டக்கூத்தராற் குறிக்கப்பெற்றுளது.

மன்னுயிரனைத்தும் தன்னுயிரெனக்கருதிச் செங்கோல்செலுத்தி வந்த இராசராசசோழன் நோயுற்றிருந்தபோது, தன் படைத்தலைவனும், சயங்கொண்டசோழமண்டலத்து ஆமூர்க்கோட்டத்துச் சிறுகுன்றநாட்டுக் காரிகைக்குளத்தூருடையானுமாகிய பல்லவராயனை திருச்சிற்றம்பலமுடையான் பெருமான்நம்பியை அழைத்து அரசாங்கத்தை நடத்தி வருமாறுசெய்து, தனக்குப்பின்னர்த் தன் மகள்வயிற்றுப்பெயரனாகிய

எதிரில்பெருமாளைக் கொணர்ந்து, கங்கைகொண்டசோழபுரத்தில் இராசாதிராசன் என்ற பெயருடன் முடிசூட்டுமாறு உத்திரவிட்டு கி. பி. 1162-ஆம் ஆண்டில் இறந்தனன். பிறகு இவன் இறந்த நான்காம் ஆண்டாகிய கி. பி. 1166-ல் பல்லவராயனுன திருச்சிற்றம்பலமுடையான் பெருமான்நம்பி என்பான் அரசன்கூறியவாறு அவ்வரசிளங்குமரனை அழைத்துக்கொண்டுவந்து இராசாதிராசன் என்ற பெயருடன் சோழமன்னர்களது தலைநகரில் முடிசூட்டினன். இவ்வேந்தனே இராசராசசோழனுக்குப்பிறகு நம் சோழமண்டலத்திற் செங்கோல்செலுத்திய இரண்டாம் இராசாதிராசசோழன் ஆவன். இச்செய்திகளெல்லாம் மாயூரத்திற்கு அண்மையிலுள்ள பல்லவராயன்பேட்டையிற் பல்லவராயனுன திருச்சிற்றம்பலமுடையான் பெருமான்நம்பியால் எடுப்பிக்கப்பெற்ற இராசராசேச்சுரம் என்ற சிவாலயத்தில் கி. பி. 1170-ஆம் ஆண்டில் வெட்டப்பெற்றுள்ள ஒரு நீண்ட கல்வெட்டாற் புலப்படுகின்றன. (Inscription No. 433 of 1924).

அரசாங்கக் கல்வெட்டு இலாகாவின் தலைவர், இராசராசசோழன் இறந்தபோது அவனுக்கு ஓராண்டுநிரம்பிய ஓர் ஆண்குழந்தையிருந்ததென்றும் அக்குழந்தைக்குப் பிரதிநிதியாக விருந்து இரண்டாம் இராசாதிராசன் ஆண்டுவந்தனன் என்றும் கி. பி. 1178-ஆம் ஆண்டில் முடிசூடிய மூன்றுங்குலோத்துங்கசோழன் நம் இராசராசனது புதல்வனே என்றும் கல்வெட்டிலாகாவின் ஆண்டு அறிக்கையில் வரைந்துள்ளனர். மற்றொருமுறை இவற்றை ஆராய்ந்து உண்மைகாண்பாம்.

T. V. சதாசிவபண்டாரத்தார்,

தமிழ்ப்பண்டிதர்,

வாணாதுறை ஹைஸ்கூல், கும்பகோணம்.

ஸ்ரீ:

மதிப்புரை.

கல்விக்கடல்:-நவீனமுறையில் உயர்ந்தபொருள்களைப்பற்றிய சிறந்த கட்டுரைகளைக்கொண்டு விளங்கும் ஒரு மாதாந்தப்பத்திரிகையாக ஸ்ரீமத். எம். வெங்கட்டராமசாஸ்திரி, எம்.ஏ., எல்.டி., அவர்கள் பத்திராதிபத்தியத்தில் நடைபெறும் இதற்கு மஹாமஹோபாத்தியாய தாக்ஷிணாத்யகலாநிதி உ. வே. சாமிநாதையரவர்கள் முதலிய தக்கோர்களால் நன்மதிப்புப்பத்திரம் அளிக்கப்பெற்றுள்ளன. பலவகையறிவையும் பரவச்செய்தற்குத் தக்கப்பொருளுரைகள் சிறந்த கல்விமான்களால் யாவரும் படித்துணரும்படி தெளிவான தமிழ்நடையில் வரையப்பெற்றுள்ளன. இதன் வருஷச்சந்தா ரூ. 3-8-0. வெளிநாடுகளுக்கு ரூ. 4-8-0. தனிப்பிரதி அணா 5. வி. பி. மணியார்டர்ச் செலவுகள் பிரத்தியேகம் சேர்க்கப்படும். வேண்டுவோர் மானேஜர், கல்விக்கடல் ஆபீஸ், திருவல்லிக்கேணி, சென்னை என்ற விலாசத்திற் பெறலாம்.

தமிழ்மொழியின்வரலாறு:—இது, சென்னைக் கிறிஸ்தவகல்லூரித் தலைமைத்தமிழ்ப் பண்டிதராயிருந்து காலஞ்சென்ற வி. கோ. சூரியநாராயணசாஸ்திரியாரால் எழுதப்பட்டதொரு ஆராய்ச்சிநூல். இதில் ஆதிவரலாறு, வடமொழிக்கலப்பு, மூவகைப்பாகுபாடு, ஐவகையிலக்கணம், பாஷையின்தோற்றமுந் தொன்மையும், பாஷையின்சிறப்பியல்பு, பாஷை வேறுபடுமாறு, நூற்பரப்பு, பாஷையின் சீர்திருத்தம், முடிவுரை: என்னும் பத்துப்பகுதிகள் அடங்கியுள்ளன. தமிழ்மொழியைப்பற்றிச் சாஸ்திரியார் அறிந்தவிஷயங்களை யாவரும் நன்குணரும்படி நல்ல தமிழ் நடையில் அவர் எழுதியவாறே நன்றாய் அச்சிடப்பட்டிருக்கும் இப்புத்தகம் தமிழ்பயிலும் உயர்தரக்கலாசாலை மாணவர்களுக்கும் பிறர்க்கும் மிகவும் உபயோகமுள்ளது. இதன் விலை ரூபா ஒன்று. வேண்டுவோர் ஸ்ரீமான் வி. சு. சுவாமிநாதையரவர்கள், புத்தகவியாபாரம், மேலக் கோபுரத்தெரு, மதுரை என்ற விலாசத்திற் பெறலாம்.

ஆங்கீரஸவருஷ வாக்கிய பஞ்சாங்கம்:— இது, யாழ்ப்பாணம் பருத்தித்துறைச் சோதிடகணிதசித்தாந்தி பிரும்மஸ்ரீ ச. சுப்பிரமணிய சாஸ்திரிகள் அநுமதிப்படி சோ. வைத்தியநாத சாஸ்திரிகளால் கணிக்கப்பட்டது. இதில் பஞ்சாங்கங்களில் முன்னும் பின்னும் வழக்கப்படி சேர்க்கும் பல விஷயங்களோடு விரதநிர்ணயம், சிரார்த்ததிதி நிர்ணயம், சுபமுகூர்த்தங்களின் காலநிர்ணயவிவரம் முதலியவற்றோடு திதி நக்ஷத்திரங்களுக்கு மணி மினிற்று எண்கள் ஆங்கில இலக்கத்திலும் நாழிகை விநாடி எண்கள் தமிழிலக்கத்திலும் குறிக்கப்பட்டிருக்கின்றன. சென்ற 25 வருடங்களின் தமிழ்மாத முதற்றேதிகளுக்குரிய ஆங்கில ஆண்டு மாதம் தேதி வாரக்குறிப்பும் மற்றும் பல விஷயங்களும் விளங்க வரையப்பெற்றுள்ளன. இதன் விலை அணா 4. தபாற்செலவுடன் அணா 5. வேண்டுவோர் ச. சோமசுந்தரையரவர்கள், கலாநிதிப் பிரஸ், பருத்தித்துறை, இலங்கை என்ற விலாசத்திற் பெறலாம்.

கம்பராமாயணச்சுருக்கம் (சுந்தரகாண்டம்):-இது, கம்பராமாயண சுந்தரகாண்டக் கதைகளைச் சுருக்கமாகவும் தெளிவாகவும் மாணவர்கள் தெரிந்துகொள்ளும்படி வசனநடையி லெழுதி யிடையிடையே பல பாடல்களுங் காட்டிக் காட்டப்பட்ட பாட்டுக்களுக்குக் குறிப்புரையும் எழுதிச்சேர்த்துப் பதிக்கப்பட்டிருக்கிறது. இதன் விலை ரூபா ஒன்று. வேண்டுவோர் ஸி. குமாரஸாமி நாயுடு ஸன்ஸ், 27. சின்னத்தம்பி தெரு, சென்னை என்ற விலாசத்திற் பெறலாம்.

பெரியபுராணக்கதைகள் (இரண்டாம்வரிசை):— இது, சென்னை ஸ்ரீமத். சே. சிவஞானம்பிள்ளையவர்களா லெழுதப்பட்டது. இதில், மானக்கஞ்சாறநாயனார் முதலிய எட்டு நாயனார்சரித்திரங்கள் சுருக்கமாகவும் தெளிவாகவும் சிறுவர்கள் படித்துணரும்படி சில படங்களுடன் பதிக்கப்பட்டுள்ளன. நம்பியாண்டார்நம்பி திருவந்தாதி, உமாபதி சிவாசாரியர் புராணசாரம்: இவைகளிலுள்ள அவ்வச்சரித்திரத்துக்குரிய செய்யுட்களும் இறுதியிற் சேர்க்கப்பட்டுள்ளன. அருஞ்சொற் குறிப்புரையும் அநுபந்தமாகப் பதிக்கப்பட்டிருக்கிறது. இதன் விலை அணா 5. வேண்டுவோர் ஸி. குமாரசாமிநாயுடு ஸன்ஸ், 27. சின்னத்தம்பி தெரு, சென்னை என்ற விலாசத்திற் பெறலாம்.

உ

ஆரியர்—மிலேச்சர்.

ந. நாராயணன், B.A., B.L., L.T., M.R.A.S., (C.B.), எழுதுவது.

சூடாமணிநிகண்டின் 11-வது பாகமாகிய ஒருசொற் பல்பொருட்பெயர்த் தொகுதியில் 40-வது செய்யுளில்,

"ஆரியர் மிலேச்சர் நல்லோ ரானெனப திடைச்சொ லாவாம்"

என்று கண்டிருக்கிறது. இதனால் சிலர் ஆரியர் என்போர் அந்நியரென்றும், மிலேச்சரென்றும் தர்க்கம் செய்கிறார்கள். இவர்கள் தர்க்கம் எவ்வாற்றானும் உண்மையாவென்பது இங்கு ஆராயற்பாலது.

இச்சூடாமணி நிகண்டிலேயே மற்றோரிடத்தில்,

"மிலேச்சரே யநாரியர்க்கா மிலேச்சரும் விதித்த பேரே"

என்றும் கண்டிருக்கிறது. இத்தொகுதியில் மிலேச்சர் அநாரியர் (ஆரியரல்லாதவர்) என்று தெளிவாய்க் கூறப்பட்டிருக்க, 11-வது தொகுதியில் ஆரியரை மிலேச்சரெனக் குறிக்கக் காரணமென்ன? நிகண்டாசிரியர் முன்பின் யோசியாமல் பிதற்றுகின்றனரா? அற்றன்று.

கீழ்நாட்டு மொழிவரலாற்றையும் மானுடவரலாற்றையும் கற்றறிந்தோர்க்குச் சில மிலேச்சர்கள் தங்களை ஆரியரென்று அழைத்துக்கொள்வது தெரியும். பாரசீகத்துப் புராதனக்குடிகள் தங்களை ஆரியர் என்றே சொல்லிக்கொண்டிருந்தார்கள். மேலைநாட்டு மொழிநூல் ஆராய்ச்சிவல்லுநரும் (philologists) பண்டைப் பாரசீகரையும், கிரேக்கரையும், ரோமானியரையும் ஆரியரென்றே கூறுகின்றனர். உண்மையில் இவர்கள் இந்தியா முழுதும் வசித்திருந்த ஆரியரின் வகையினரே. பின்னர் இவர்கள் இந்தியாவை விடுத்து வடமேற்றிசையிற் சென்று பாரசீகம், இத்தாலியா, கிரீஸ் முதலிய இடங்களிற் குடியேறினர்கள். இவ்வாறு வெளியேறியவர்கள் தங்கள் சமயம், மொழி, நடை, உடை, பாவனைகள் அனைத்தையும் ஒருங்கே ஒழித்தனரேனும் ஆரியர் என்ற பெயரைமட்டும் விடாதுபிடித்துக்கொண்டனர். பிற்காலத்தில் இவர்கள் யவனர், சோனகர் என்ற பெயர்களுடன் இந்தியாவுக்குச் சிற்சிலராய் வந்து, கைத்தொழில், வியாபாரம் முதலியன செய்தும், அசாரவாசிகள் (watchmen) ஆகவும் காரியதரிசிகள் (overseers) ஆகவும் அமர்ந்தும்

இருந்தனர். இவர்களைப்பற்றிப் பண்டை நூல்கள் பலவும் கூறுகின்றன. அவைகளில் இவர்களது தோற்றமும் உடையும், தொழிலும் நன்கு விளக்கப்பட்டிருக்கின்றன. உதாரணங்களனைத்துங் கூற இடமின்மையின், இங்குச் சிற்சிலவே கூறுவாம்.

"மத்திகை வளைஇய மறிந்து வீங்கு செறிவுடை
மெய்ப்பை புக்க வெருவருந் தோற்றத்து
வலிபுணர் யாக்கை வன்கண் யவனர்
புலித்தொடர் விட்ட புனைமா ணல்லிற்
றிருமணி விளக்கங் காட்டித் திண்ஞா
ணெழினி வாங்கிய வீரறைப் பள்ளியு
ளுடம்பி னுரைக்கு முரையா நாவிற்
படம்புகு மிலேச்ச ருழையராக"

என்பது முல்லைப்பாட்டு. இதில் யவனரும் மிலேச்சரும் ஒருதன்மையினராகக் கூறப்பட்டுள்ளனர். யவனரே சோனகர் என்பர் நச்சினார்க்கினியர். சூடாமணிநிகண்டிலும்,

"துலைப்படும் யவன ரென்ப சோனக ருவச்ச ரும்பேர்"

என்று கூறப்பட்டுள்ளது. இச்செய்யுட்கு உரையெழுதியவர் "சோனகர்—சோனக மென்னும் தேசத்துக்குரியவர்" என்றும், "யவனர்—யவனமென்னுந் தேசத்துக்குரியவர்" என்றும் குறித்திருக்கின்றார். நாடுகள் வேறாயினும் அவர்கள் பரதகண்டத்திற்கு வெளியே யுள்ளவர்களாகையால் அவர்கள் அந்நியர். இவ்விஷயம் அவர்கட்குப் பொது. மேலும் அவர்களது நடை, உடை, பாவனைகளும் பொது. இன்றும் யாழ்ப்பாணத்தில் துலுக்கர்களை (Moslems) சோனகர் என்றே அழைக்கின்றனர். எனவே, மிலேச்சர் என்பது இவர்கட்கெல்லாம் பண்டை ஆரியரால் கொடுக்கப்பட்ட ஒரு பெயர். அது வடசொல்: அதாவது, ஆரியர் மொழியைச்சேர்ந்தது. அதன்பொருள் 'திருந்தாத பேச்சுடையவர்' என்பதாம் (சூடாமணி நிகண்டு உரை). பண்டை ஆரியர் இப்பெயரைத் தங்கள்பொருட்டே உண்டுபண்ணினர் என்பது சற்றும் பொருந்தாது.

நிற்க: இம்மிலேச்சர் இன்னுஞ் சில பண்டை நூல்களிலும் விவரிக்கப்பட்டிருக்கின்றனர்.

"கயவாய் மருங்கிற் காண்போர்த் தடுக்கும்
பயனற வறியா யவன ரிருக்கையும்"

என்பது சிலப்பதிகாரம் (v. 9–10.). 'யவனர்' என்பதற்கு 'மிலேச்சர்' என்று அடியார்க்குநல்லார் உரைவரைகின்றனர்.

"செங்கட் புன்மயிர்த் தோறிரை செம்முக
வெங்க ணேக்கிற்குப் பாய மிலேச்சனே"

என்பது சீவகசிந்தாமணி (கோவிந்தையார் : ௨௬).

இனி இவர்கட்கு ஆரியர் என்ற பெயர் எந்நூலில் உளதெனப் பார்ப்போம். கடவுண்மாமுனிவர் செய்தருளிய திருவாதவூரடிகள்புராணத்தில், மண்சுமந்தசருக்கத்தில், 17-வது செய்யுளில்

"முறைமுறை வணங்கி நின்ற வாரியர் முகத்தை நோக்கி"

என்பது முதல்வரி. அதன் உரையில் "ஆரியர்—காரியதரிசிகள்" என்று காணப்படுகிறது. 'காரியதரிசிகள்' என்றால் 'காரியத்தை மேற்பார்ப்போர்' (supervisors or overseers) என்று பொருள்படும். இவர்கள் யவனர் முதலிய மிலேச்சர் என்பது பண்டைநூல்களினின்று வெளியாகின்றது. மேலும், மேற்கூறிய உரையிலேயே "இனி ஆரியர் என்பதற்கு மிலேச்சர் எனப் பொருள்கோடலு மொன்று. அக்கருத்தை, "செங்கட் புன்மயிர்த் தோறிரை செம்முக, வெங்க ணேக்கிற்குப் பாய மிலேச்சனே" என்றற் றொடக்கத்துப் பண்டை இலக்கியங்களா னுய்த்துணர்க" என்றும் கண்டிருக்கிறது. ஆகவே, பண்டை ஆரியரைவிட்டுச் சென்று மறுபடி யவரிடம் மிலேச்சராய் வந்துசேர்ந்து, வேலையிலமர்ந்தவர்க்கும் ஆரியரென்ற பெயருண்டென்பது தெளிந்தது.

இத் திருவாதவூரடிகள்புராணத்தில் இப் போலி ஆரியரின் தோற்றத்திற்கேற்பச் செய்கையும் வருணிக்கப்பட்டிருக்கிறது. பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடற்புராணத்திற் பாண்டியனே சுந்தரரை அடித்ததாகக் காணப்படுகிறது. இப்புராணத்திலோவெனில் ஆரியன் ஒருவன் அவரை அடித்ததாகச் சொல்லப்படுகிறது; இக்கொடுஞ்செயல் மிலேச்சனுக்கே உரித்தென்று முனிவர் நினைத்தனர்போலும்.

இதுபோக, முற்காலத்திற் குதிரைவியாபாரிகளும் குதிரைப்பாகர்களும் பெரும்பாலும் மிலேச்சராகவே இருந்தனர். இவர்கட்கும் ஆரியர் என்று பெயர். இப்பதம் மேற்கூறிய புராணத்திற் காணப்படுகின்றது.

"பூசல்புரி வெம்பரி பொருந்துபடை யூடே
மாசில்குல வாரியரின் மன்னனென வந்தார்"

(திருவாதவூர் : குதிரை : 18). இச்சருக்கத்தின் 15–18ம் செய்யுட்களையும் வாசித்துப்பார்த்தால் இவர் மிலேச்சரென்று நன்குவிளங்கும். இச்சருக்கத்து 29-வது செய்யுளுரையில் இவரைக் 'குதிரைராவுத்தன்' என்கிறார் உரையாசிரியர். 'ராவுத்தன்' என்பது திருநெல்வேலி வழக்கு: அதற்குத் துலுக்கன் என்பது பொருள்.

சில விடங்களில் 'குதிரைராவுத்தன்' என்பது "அச்சுவவாரியன்" (அச்சுவ=குதிரை+ஆரியன்=ராவுத்தன்) என்று கூறப்படுகிறது. உ-ம்: சிலப்பதிகாரம், V. 54ல் 'கடும்பரி கடவுநர்' என்பதற்குக் 'கடிய பரிகளைக் கடவுவாராகிய அச்சுவவாரியர்' என்று கூறப்பட்டிருக்கிறது. அல்லது இப்பதம் 'வாசியாரியன்' (வாசி=குதிரை+ஆரியன்=ராவுத்தன்) என்றும் காணப்படுகிறது. [மதுரைக்காஞ்சி, 389, உரை. ('வாசிவாரியன் என்பது பிழை. தொல்காப்பியம் எழுத்ததிகாரம் கசο ம் சூத்திரம் "எல்லா மொழிக்கு முயிர்வரு வழியே, யுடம்படு மெய்யி னுருபுகொளல் வரையார்" என்பதன்படி 'வாசியாரியன்' என் றிருத்தல்வேண்டும்)].

இதுகாறும் சொன்னதினின்றும் 'ஆரியன்' என்ற சொற்கு 'மிலேச்சன்' என்ற பொருள் வாலாற்றுமுறையாற் சிற்சிலவிடங்களிற் பொருந்துமேயன்றி ஆரியரானவர்க்கும் அதிலும் பண்டையாரியர் எவர்க்கும் அப்பொருள் பொருந்தாதென்று பெறப்பட்டது. இதற்கு மாறான கூற்றைக் கொள்ளற்க.